**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No. 49/2025 - PW-1**

| | |
|---|---|
| Name | திரு. பார்த்திபன் |
| Husband/Father Name | நாகராஜ் |
| Village /Area | வசூர் |
| Taluk | சோளிங்கர் |
| Occupation | ஓட்டுநர் |
| Age | 32 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 16.09.2025.

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். 2025ம் ஆண்டு ஜனவரி மாதம் பொங்கல் தினத்தன்று ஆற்காடு to பொன்னை 11ஏ பேருந்தில் ஓட்டுநராக பணியாற்றி கொண்டிருந்தேன். என்னுடன் கிருஷ்ணன் என்பவர் நடத்துனராக பணியில் இருந்தார். அன்று இரவு 9.00 முதல் 9.30 மணி அளவில் கீரைசாத்து கிராமத்தில் எங்கள் பேருந்தை அரசினர் ஆரம்ப பள்ளி அருகில் நிறுத்தி வைத்திருந்தோம். டிக்கெட் வழங்கும் இயந்திரத்தில் சார்ஜ் போடுவதற்காகவும் நாங்கள் இருவரும் சாப்பிடுவதற்காகவும் நாங்கள் இருவரும் அங்கன்வாடி கட்டிடதிற்குள் சென்று சாப்பிட்டு கொண்டிருந்தோம். அப்போது டமார் என்று சத்தம் கேட்டது சென்று நானும் நடத்துனரும் பார்த்த போது மேற்படி பேருந்தினுடைய முன்பக்க கண்ணாடி உடைந்திருந்தது. அப்போது அங்கு ஆட்கள் யாரும் இல்லை. உடனடியாக என்னுடன் வந்த நடத்துனர் அருள் என்ற மற்றொரு ஓட்டுநரை இது குறித்து

தெரிவித்த போது ஏற்கனவே இதே வழிதடத்தில் 3 நபர்கள் பிரச்சனை செய்துவிட்டு சென்றதாகவும் அவர்கள் பெயர்கள் ராஜேஷ், சங்கர், ராஜவேலு என்று கூறினார். பிறகு அவர் நடத்துனரிடம் மேற்படி நபர்கள் தான் பேருந்தின் கண்ணாடியை உடைத்து இருப்பார்கள் என்று கூறி காவல் நிலையத்தில் புகார் கொடுக்க சொன்னதால் நானும் நடத்துனரும் சென்று காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். புகாரின் அடிப்படையில் விசாரித்ததில் ஆஜர் எதிரி தான் மேற்படி பேருந்தின் கண்ணாடியை உடைத்ததாக கூறினார்கள். நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் புகாரிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அது **அதாசா.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**</u>

நான் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து கழகத்தில் 2 மாதம் தான் தற்காலிக ஊழியராக பணிபுரிந்தேன். 11ஏ என்ற பேருந்தை நான் சம்பவ தினம் மட்டும் தான் மேற்படி வழிதடத்தில் ஓட்டினேன். என்னுடன் இருந்த நடத்துனர் ஏற்கனவே அந்த வழிதடத்தில் மேற்படி பேருந்தில் நடத்துனராக பணி செய்துள்ளார். நான் புகாரை சுமார் இரவு 10.00 மணிக்கு மேல் கொடுத்தேன். புகாரிலுள்ள விவரங்களை நான் எழுதவில்லை கையொப்பம் மட்டும் இட்டேன். பொங்கலுக்கு முன்தினம் இரவு நான் புகாரை கொடுத்தேன். புகாரிலுள்ள விவரங்களை நான் படித்து பார்க்கவில்லை. புகாரில் ஆஜர் எதிரி பேருந்தின் கண்ணாடியை உடைத்துவிட்டு இறங்கும் போது அவரை நான் பார்த்ததாக பொய்யாக கூறியுள்ளேன் என்றும் தற்போது நான் கண்ணாடி உடைத்தது யார் என்று தெரியாது கூறுவதால் நான் கொடுத்த புகார் பொய் புகார் என்று சொன்னால் சரிதான். நான்

சம்பவத்திற்கு முன்பு ஆஜர் எதிரியை பார்த்தது இல்லை. அங்கன்வாடியில் நாங்கள் பேருந்தை நிறுத்திவிட்டு மது பாட்டில்களை அங்கு போட்டதால் அந்த ஊரை சேர்ந்த இளைஞர்கள் அது குறித்து கேள்வி கேட்டதால் அதனால் ஏற்பட்ட காழ்ப்புணர்ச்சியின் விளைவாக பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நானும் கிருஷ்ணனும் அருள் கூறியதன் அடிப்படையில் தான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம் என்று சொன்னால் சரிதான். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் நான் கண்ணாடி உடைத்ததை நேரில் பார்க்கவில்லை. நான் சம்பவத்தை நேரில் பார்த்ததாக கூறியுள்ள விவரம் தவறு என்றும் எனவே இந்த வழக்கு நிலைக்கதக்கதில்லை என்று சொன்னால் சரியல்ல.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.09.16 17:17:18 +0545

II Additional District and Sessions Judge,
Arakkonam.